### பால் உற்பத்தியில் சாதனை படைத்த

# ‘திராவிட மாடல்’ அரசைப் பின்பற்றி பால் உற்பத்தியை பெருக்கிடுக!

## சட்டப் பேரவையில் அரவக்குறிச்சி பி.ஆர்.இளங்கோ பேச்சு!

சென்னை.செப்.7.

**பால் உற்பத்தியில் சாதனை படைத்த திராவிட மாடல் அரசைப் பின்பற்றி பால் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அரவக்குறிச்சி சட்ட மன்ற தொகுதியில் நிறுத்தப்பட்ட திட்டங் களை உடனடியாக செயல்படுத்த வேண் டும் என சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ பேசினார்.**

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மொஞ்சனூர் பி. .ஆர். இளங்கோ பேசியதாவது:

தந்தை பெரியார் அவர்கள், பேரறி ஞர் அண்ணா அவர்கள், கடைசி மூச்சு வரை மக்களுக்காக வாழ்ந்து மறைந்த முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், இருக்கும் திசையை நோக்கி வணங்குகிறேன். மதச்சார்பின்மை மக ளிர் மேம்பாடு, விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதார மேம்பாடு ஆகியவற்றை அடித்தளமாக கொண்டு, முதலமைச்ச ராக பொறுப்பேற்று, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என திட் டங்களை தந்து, மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ள முன்னாள் முதல்வர், கழகத்தின் ஒப்பற்ற தலைவர் அவர் களை வணங்குகின்றேன். கழக அர சின் பல்வேறு திட்டங்களுக்கு சொந்தக் காரர், எதிர்க்கட்சித் தலைவர், எங்களின் எதிர்காலம், இளம் தலைவர் அவர் களை வணங்குகின்றேன்.

கரூர் மாவட்டத்திற்கு பல்வேறு திட் டங்களை பெற்று தந்த எங்களின் வழி காட்டி, முன்னாள் அமைச்சர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் அண் ணன் செந்தில் பாலாஜி அவர்களை வணங்குகின்றேன். எதிர்க்கட்சி துணைத் தலைவர் முன்னாள் அமைச் சர் அண்ணன் கே. என். நேரு அவர்க ளுக்கும், கொறடா முன்னாள் அமைச் சர் அண்ணன் எ.வ.வேலு அவர்க ளுக்கும், துணை கொறடா அவர்களுக் கும், அனைவருக்கும் நன்றியை தெரி வித்துக் கொள்கிறேன்.

**உலகமே அஞ்சிய கொரோனா! ஆட்சிக்கு வந்துமே நலத்திட்ட உதவிகள்!**

உலகமே அஞ்சிய கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தில் கழக அரசு பொறுப்பேற்ற உடனே குடும்ப அட்டைக்கு 4000 ரூபாய் மட்டுமல்ல, கடும் நிதி நெருக்கடியிலும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றியவர்தான் எங்களின் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள்.

நான் சென்ற முறை வெற்றி பெற்ற போது பல்வேறு கோரிக்கைகளை வைத்தேன். எனது தொகுதிக்கு 1600 கோடி ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகள் பெறப்பட்டது. கரூரை முருங்கை மண் டலமாக அறிவிக்கப்பட்டு முருங்கைப் பொருட்களை மதிப்பு கூட்டுதல் தொடர் பான எக்ஸ்போ நடத்தப்பட்டது. முருங்கை பார்க். அமைக்க 6ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. நாகம்பள்ளி 54 ஏக்கரில் சிப்காட் அமைக்க நிலம் ஒதுக் கப்பட்டுள்ளது. நாகம்பள்ளியில் 2 கோடி மதிப்பீட்டில் கோழி ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது

தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தில் ஒப்பந்த தொழிலாளர்க ளாக பணிபுரிந்த 588 நபர்களுக்கு பணி நிரந்தரம் செய்யப்பட்டது. இன் னும் 225 நபர்கள் பணி நிரந்தரம் செய் யப்பட வேண்டும். மற்றும் நிலம் தந்த 25 வாரிசுதாரர்களுக்கு பணி வழங்க வேண்டும். பணியில் இருக்கும் போது இறந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற் றும் நிலம் தந்து ஓய்வு பெற்ற தொழிலா ளர்களின் வாரிசுதாரர்களுக்கு தகுதி யின் அடிப்படையில் பணி வழங்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**நிறுத்தப்பட்ட கரூர் டைடல் பார்க் திட்டம் உடனே தொடங்குக!**

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் தான் அதிக தொழில்நுட்ப கல்லூரிகள் தொடங்கப்பட்டன. அதன் தொடர்ச்சி யாக அனைத்து மாவட்டங்களிலும் படித்து முடித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு பெற டைடல் பார்க் திட்டம் தொடங்கப்பட்டன. கரூர் மாவட்டத்தி லும் தொடங்கப்பட்டது. டெண்டர் முடிந்து பணி நடைபெறும் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் ஆரம்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பேரவை தலைவர் அவர்களே, விவ சாய பெருமக்களின் முதுகெலும்பான பால் உற்பத்தியில் தமிழ்நாடு முன் னணி மாநிலமாக திகழ்கின்றது. நாள் ஒன்றிற்கு 2.5 கோடி லிட்டர்

முதல் 3 கோடி லிட்டர் வரை பால் உற்பத்தி ஆகின்றது. ஆவின் நிறுவனம் 35 இலட்சம் லிட்டர் தான் பால் கொள்மு தல் செய்கின்றது. அதாவது 12 சதவீதம் தான் ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்கின்றது. இந்த அரசு இதனை கவ னத்தில் எடுத்துக் கொண்டு,50 சதவீத மாக பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும்.

உங்களுடைய கொள்கை விளக்க புத்தகத்தில் 2020 ஆம் ஆண்டு 8.75 மில்லியன் டன் ஆக இருந்தது 2026 இல் 11.44 மில்லியன் டன் ஆக உயர்ந் துள்ளது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்க்கு காரணம் திராவிட மாடல் அர சின் கொள்கைகள் தான்.

உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற பழமொ ழியே இந்த பால் உற்பத்தியாளர்கள் நிலை உள்ளது. பால் கொள்முதல் விலை 44 ரூபாய் மட்டுமே கிடைக்கின்றது. மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது குறைவாகவே இருப்ப தால் 60 ரூபாய்க்கு பால் கொள்முதல் செய்ய வேண்டும்.

**பால் உற்பத்தி பெருக கடன் வழங்கியது கழக ஆட்சிதான்!**

கழக ஆட்சியில் தான் பால் உற்பத் தியை பெருக்க, கால்நடைகளை பராம ரிக்க, கூட்டுறவு சங்கங்களில் கடன் வழங்கப்பட்டது. எல்.நினோ வறட்சி யின் கோரப்பிடியில் உள்ள விவசாயி களின் நலன் கருதி கூட்டுறவு சங்கங்க ளில் பெறப்பட்ட கால்நடை பராமரிப்பு கடன்களை தள்ளுபடி செய்ய வேண் டும்.

நான் இதை இவ்வளவு விளக்கமாக கூறுகின்றேன் என்றால், நானும் ஒரு விவசாயி. பால் உற்பத்தி செய்கின்றேன் என்பதை தெரிவித்துக் கொண்டு, க.பர மத்தி பகுதியில் கால்நடை மருத்துவம னையுடன் கூடிய செம்மறி ஆடு ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண் டும். கறிக்கோழி வளர்ப்பு மிகவும் சவா லாக மாறிவிட்டது கறிக்கோழி வளர்ப்ப வர்களுக்கு உரிய கூலியை நிர்ணயம் செய்து தர வேண்டுமாய் கேட்டுக்கொள் கின்றேன்.

**ஆவின் பாக்கெட் பால் தட்டுப்பாடு!**

பேரவை தலைவர் அவர்களே, தற் போது ஆவின் பாக்கெட் பால் தட்டுப்பாடு ஏற்படுகின்றது. குறிப்பாக மாலை நேரங்களில் கிடைப்பதில்லை. தனியார் பால் அதிக அளவில் விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. இதனால் குழந்தைகள், பெரியவர்கள் பாதிப்படை கின்றனர். உடனடியாக அரசு நடவ டிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அரவக்குறிச்சி சட்டமன்ற தொதிக்குட் பட்ட 300 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ள தாதம்பாளையம் ஏரிக்கு அமரா வதி ஆற்றில் இருந்து உபரி நீர் பம்பிங் செய்து, ஆண்டி செட்டிபாளையம் வரை கொண்டு வந்து, அங்கிருந்து நீர் வழித் தட வழியாக தாதம்பாளையம் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தை உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டும்.

தாதம்பாளையம் ஏரியானது வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதனை உடனடியாக விடுவித்து ஏரியை தூர் வாரவும், தண்ணீர் தேக்க பம்பிங் செய்து ஆண்டி செட்டிபாளை யம் வரை கொண்டு வந்து அங்கிருந்து நீரோடை வழியாக தாதம்பாளையம் ஏரிக்கு தண்ணீர் கொண்டு வரும் திட் டத்தை உடனடியாக அமல்படுத்த



வேண்டும்.

**அமராவதி ஆற்றில் தண்ணீர் திறக்க வேண்டும்!**

அமராவதி ஆற்றில் கரூர் மாவட்டம் கரூர் சட்டமன்ற தொகுதி, அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கும் குடிநீர் தேவைக்காக 3 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்பட வேண்டும். அப்போதுதான் மாவட்ட எல்லை வரை தண்ணீர் வந்து சேரும். தற்போது ஆயிரம் கன அடி தண்ணீர் திறப்பதாக சொல்லி உள்ளார் கள். திருப்பூர் மாவட்டம் தாராபுரம் பகு திக்கு மட்டுமே வந்து சேரும். கடும் குடி நீர் தட்டுப்பாடு நிலவுவதால் பொதுமக்களின் நலம் கருதி 3 ஆயிரம் கன அடி நீர் திறந்தால் மட்டுமே கடை மடை வரை தண்ணீர் வரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

பாண்டியாறு, பொன்னம்புளாவை, மாயாறுடன் இணைப்பு திட்டத்தை செயல்படுத்தி பவானிசாகர் அணைக்கு ஆண்டு முழுவதும் தடையின்றி நீர்வ ரத்தை உறுதி செய்ய வேண்டும். பரமத் தியை தலைமை இடமாக கொண்டு புதிய தாலுகா அமைக்கப்பட வேண்டும். தீயணைப்பு நிலையம் அமைக்கப்பட வேண்டும். அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தி தரம் உயர்த் தப்பட வேண்டும். தென்னிலையில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட வேண்டும். பள்ளப்பட்டி யில் மக்கள் பயன்பாட்டிற்கு வக்பு இடத் தில் பூங்காக்கள், நடை பயிற்சி பாதை அமைக்க அனுமதி வழங்க வேண்டும்.

பள்ளபட்டி நங்காஞ்சி ஆற்றை சுத் தம் செய்து கழிவுகலக்காமல் இருக்க கால்வாய் அமைக்கப்பட வேண்டும். மண்மாரி வரை சாலை, இருபுறமும் கழிவு நீர் கால்வாய் அமைக்கப்பட வேண்டும். மண் சாலைகளை தார் சாலையாக தரம் உயர்த்த கழிவு நீர் கால்வாய் அமைக்க வேண்டும்.

மோட்டார் வாகன பகுதி 1. அலுவல கத்திற்கு புதியதாக தேர்வு செய்யப்பட்ட இடத்தில் கட்டிடம், சார்பதிவாளர் அலுவ லகத்திற்கு தேர்வு செய்யப்பட்ட இடத்தில் கட்டிடம் கட்ட நிதி வழங்க வேண்டும். புகலூர் நகராட்சி பகுதியிலுள்ள பாரி கரும்பாலையிலிருந்தும், காகித ஆலை தொழிற்சாலையில் இருந்தும் கறி துகள் கள் வெளியேறி படிந்து விடுகின்றது. இதை தடுக்க வேண்டும் எனஸகேட் டுக்கொள்கிறேன்.

**உயர்மட்ட பாலங்கள் – தடுப்பணைகள் தேவை!**

தும்பிவாடியில் இருந்து மதுரை பைபாஸ் செல்ல அமராவதி ஆற்றின் மேல் உயர்மட்ட பாலம், கூடலூர் மேற்கு ஊராட்சி அருங்கரை அம்மன் கோவில் அருகில் தடுப்பணை, நாகம் பள்ளி ஊராட்சியில் தடுப்பணை,குடக னாற்றின் குறுக்கே பெரிய மஞ்சுவளி ஊராட்சியில் தடுப்பணை அமைக்கப்பட வேண்டும். அணை கருப்பணசாமி கோயிலில் இருந்து அரவக்குறிச்சி செல்ல நங்காஞ்சியாற்றில் மேம்பாலம், காட்டம்பட்டியில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர் மட்ட பாலம் அமைக்கப் பட வேண்டும்.

கரூர் ஈரோடு தேசிய நெடுஞ்சாலை அகலப்படுத்தப்பட்டு வருகின்றது. நொய் யல் ஆற்றின் மேல் நான்கு வழிச் சாலையாக தரம் உயர்த்த ஒரு உயர் மட்ட பாலம் அமைக்கப்பட வேண்டும் . நொய்யலில் இருந்து வேலாயுதம்பா ளையம் செல்லும் சாலையில் உயர் மட்ட பாலம், புகழூர் காகித ஆலை நிறு வனத்துக்கு அருகில் புண்ணம் சாலையில் உள்ள ரயில்வே பாதைக்கு உயர்மட்ட பாலம், சேலம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் தற்போது அர வக்குறிச்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் அரசு கல்லூரிக்கு அருகில் உயர்மட்ட பாலம், அமைக்கப்பட வேண்டும்.

க.பரமத்தி ஊராட்சி ஒன்றியம் 30 ஊராட்சிகளைக் கொண்டது. ஊராட்சிக ளின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு புதிதாக சின்ன தாராபுரத்தை தலையிட மாகக் கொண்டு ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட வேண்டும். காவிரி கரை பகுதியில் அமைந்துள்ள வேட்டமங்க லம் ஊராட்சிக்கு புதிய குடிநீர் திட்டம் தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் அமிர்த திட்டத்தை விரைந்து முடிக்க வேண் டும். இதனால் சேதம் அடைந்த சாலை கள் உடனடியாக புதுப்பிக்கப்பட வேண்டும்.

**உடைந்த ஷட்டர்கள்**

ஊராட்சிகளில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு மாத ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும். நொய் யல் நீர்த்தேக்கம், ஆத்துப்பாளையம் அணையை உடனடியாக தூர் வாரி பராமரிப்பு செய்தல் வேண்டும். பிரதான கால்வாய் சட்டர் பழுதடைந்து நீர்த்தேக்க முடியாமல் உள்ளதால் போர்க்கால அடிப்படையில் ஷட்டர்கள் புதிதாக அமைக்க வேண்டும்

கிடைகாரம் பாளையம், கருநெல்லி வலசு, தோட்டக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டு தயார் நிலையில் உள்ளது. உடனடியாக துணை மின் நிலையம் அமைக்க ஆவண செய்யுமாறு கேட் டுக்கொள்கிறேன். பள்ளப்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து ஈசநத்தம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் வந்து செல்ல காலை மற்றும் மாலை நேரங்க ளில் புதிய வழித்தடத்தில் பேருந்து சேவைகள் துவக்கப்பட வேண்டும் .

எனக்கு பேச வாய்ப்பளித்த பேரவை தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரி வித்துக் கொண்டு, மீண்டும் ஒருமுறை எனக்கு வாய்ப்பு வழங்கிய கழக தலை வர் அவர்களுக்கும், இளம் தலைவர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டத்தின் முன்னாள் அமைச்சர், மாவட்ட கழகச் செயலாளர் அவர்களுக்கும், அரவக்கு றிச்சி சட்டமன்ற தொகுதி மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் தர்மம் மறுபடியும் வெல்லும் என்ற பழ மொழிக்கு ஏற்ப மீண்டும் திராவிடமாடல் ஆட்சி அமையும் என்று கூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

---

### எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்காமல் – முதல்வர்

# ‘வைப்’ ஏற்றும்படியாக டிராமாவை அரங்கேற்றுவார்!

இன்று நடக்கவிருக்கின்ற சட்டமன்ற நிகழ்ச்சியை, ஏதோ ஒரு பெரிய பேனர் சினிமாவின் FDFS அதாவது முதல் நாள் முதல் காட்சி பார்ப்பது போன்ற தோற்றத்தை, நடிகர் விஜய்யும் ஊடகங்களும் கடந்த இரண்டு நாட்களாக பெரிய அளவில் கட்டமைத்து வருகின்றனர்.

தமிழ்நாட்டின் அரசியலையும், ஆட்சிமுறையையும், சட்டமன்றத்தையும் ஒருவிதமான மாஸ் லைவ் சினிமாவைப் போல இந்த த.வெ.க. கட்சியினரும், விலை போகும் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் மாற்றி விட்டிருக்கின்றனர்.

இதற்குக் காரணம், வாசிப்பு அனுபவங்களை எல்லாம் கைவிட்டு விட்டு, ஒன்றாம் வகுப்பு துவங்கி... கல்லூரிப் படிப்பு வரையிலும்... கொடுக்கின்ற சிலபஸ்... அதற்கான புத்தகங்கள்... அதை மனப்பாடம் செய்து அந்தந்த தேர்வில் வாந்தியெடுத்து விட்டு, மதிப்பெண்கள் வந்தபிறகு அந்த சப்ஜெக்ட்டையே மறந்து விட்டு அடுத்த நிலைக்கான சிலபஸை மனப்பாடம் செய்யக் கிளம்பிவிடும் கல்விச் சூழல் தான் என்பது என் உறுதியான நம்பிக்கை.

ஐந்து வயது முதல் 23 வயது வரையிலும் வேறு எதிலுமே கவனம் செலுத்தாமல் வாசிப்பு என்றால் பள்ளி கல்லூரிகளில் கொடுக்கப்படும் சிலபஸுக்கு உண்டான புத்தகத்தை மனப்பாடம் செய்து தூக்கி எரிவது என்கிற நிலைதான் இப்பொழுது இருக்கிறது. அதற்கே அவர்களுக்கு நேரம் சரியாக இருக்கின்றது.

இடையில் பல்வேறு விதமான சிறுகதைகள், படக்கதைகள், காமிக்ஸ் வகை புத்தகங்கள், குழந்தைகள் மாணவர்கள், இளைஞர்களுக்கான வார இதழ்கள், மாத இதழ்கள், தினசரிகள், வரலாற்றுப் புதினங்கள், சமூக நாவல்கள் இப்படி வகை வகையாகப் படித்து வரலாறு, சமூகம், உலக ஞானம் இப்படி எதைப் பற்றியுமே வாசித்துப் பழகாத நிலையில் தான் இன்றைய இளைஞர்கள் பள்ளிக் கல்லூரி தொழிற்சாலைகளில் உருவாக்கப்பட்டு வெளியே தள்ளப்படுகின்றார்கள்.



**சௌமியன் வைத்தியநாதன்**
கழக இலக்கிய அணி துணைச்செயலாளர்

அவர்களுக்கான பொழுது போக்கு என்றால், மிகப் பெரும்பான்மையாக வீடியோ கேம்ஸ், ஆன் லைன் சாட்டுகள், சினிமா அவ்ளோ தான். இப்பொழுது லேட்டஸ்டாக ரீல்ஸ் பார்ப்பது அல்லது ரீல்ஸ் போடுவது !

இந்த வகையான மீடியாக்கள் வழியாகத்தான் அவர்கள் உலகைப் பற்றிய, தன்னைச் சுற்றியுள்ள சமூகம், அரசியல் பற்றிய பாடங்களைக் கற்கிறார்கள்.

வீதிகளில் சென்று விளையாடும் வாய்ப்பு 90 சதவிகித குழந்தைகள் முதல் இளைஞர்கள் வரை வாய்க்கப் பெறுவதே இல்லை. வீதிகளில் சக தோழர்களுடன் விளை யாடும் பொழுது கீழே விழுந்தோ, அவர்களுக்குள் ஏற்படும் சின்னச் சின்ன சண்டைகளின் போது அடிபட்டோ, முட்டிக்கால்களில் ரத்தம் வழிந்தோ, பல் உடைந்து போயோ, நெற்றிப் பொட்டில் அடிபட்டு தையல் போடும் அளவிற்கு நிலைமை சென்றோ.

இப்படியாக ரத்தம், காயம் சம்பந்தப்பட்ட எந்த நேரடி வலிகளையும், உணர்வுகளையும் அனுபவிக்காமலேயே 90 சதவிகிதம் பேர் இளைஞர்களாக உருமாறி வருகின்றனர்.

அவர்களுக்கு எல்லாம் திரையில் காட்டப்படும் கத்திக் குத்து, கொடூர கொலை, வன்முறை பற்றிய வைப் கிடைக்கிறதே தவிர, அதை அனுபவிப்பவர்களுக்கு ஏற்படும் உச்சக்கட்ட வலிகளும், வேதனைகளும், வாழ்க்கை முடிவடைவதும், அந்த நபர்களின் குடும்பத்தின் எதிர்காலம் குறித்தும் எந்த உணர்வுமே இல்லாத மரக்கட்டை மனிதர்க ளாகவே அவர்கள் இந்த சமூகத்தில் செயல்பட களம் இறக்கப்படுகின்றார்கள்!

அவர்களுக்கு வெட்டுபவன் தான் வில்லன், வெட்டப்படுபவன் அப்பாவி அல்லது பலவீனமானவன், வெட்டுவதை தடுப்பவன் தான் ஹீரோ என்ற உண்மைகளை யார் சொல்லிக் கொடுப்பது?

சுயநலத்தாலும், பேராசையாலும், பணத்திற்காகவும் புழுப்புழுத்துப் போயிருக்கும் ஊடகங்களும், ஊடகவிய லாளர்களும் இதை எல்லாம் எடுத்துச் சொல்வார்களா? மாட்டார்கள், அவர்கள் தங்கள் கடமையை மறந்து, அறம் ஒழிந்து வெகு வருடங்கள் ஓடி விட்டன.

ஜனநாயகத்தில் அதாவது மக்களாட்சியில் சட்டமன்றம், எதிர்க்கட்சிகள், நீதிமன்றங்கள் மற்றும் ஊடகங்கள் தான் நான்கு தூண்கள். இந்த நான்கு தூண்களின் மீது தான் மக்களாட்சி மண்டபம் கட்டப்பட்டு அதன் மீது அமர்ந்து ஆட்சியாளர் ஆட்சி செய்ய வேண்டும்.

முதலில் சட்டமன்றம். இதில் தான் மக்கள் பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் பந்தி விரிப்பார்கள். அதற்கு ஆளுங்கட்சி மிகச் சரியான பதிலைத் தரவேண்டும். பதில் இல்லாவிட்டால் மன்னிப்புக் கோரி விரைவில் அந்தப் பிரச்சினையை சரி செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்து அதை நிறைவேற்ற வேண்டும்.

அந்த ஆளுங்கட்சி இதையெல்லாம் மதிக்கவில்லை என்றால், அதாவது எதிர்க்கட்சிகள் தான் வேண்டுமென்றே குற்றச்சாட்டு வைக்கின்றார்கள் என்று சமாளித்தோ அல்லது கடந்த ஆட்சிக்காலங்களில் இப்படி நடக்கவில்லையா? என்று பிரச்சினையை திசைமாற்றி மக்களை கைவிட்டாலோ.

அந்தப் பிரச்சினையை எதிர்க்கட்சிகளோ அல்லது பாதிக்கப்பட்ட மக்களோ அல்லது அதன் அமைப்போ நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வார்கள். மக்கள் மன்றத்தில் ஆளுங்கட்சியால் உதாசீனப்படுத்தப்பட்ட பல்வேறு மக்கள் பிரச்சினைகளில் ஐம்பது சதவிகித பிரச்சினைகளுக்கு அங்கே தீர்வு கிடைக்கும்.

நீதிமன்றத்திலும் தீர்வு கிடைக்காத பிரச்சினைகளை, ஊடகங்கள் தான் தொடர்ந்து எழுதி, பேசி, காட்சிப்படுத்தி, அரசாங்கத்தை ஆட்சியாளர்களை வழிக்கு வரவழைத்து தீர்வு காண உதவ வேண்டும்.

காரணம் மக்கள் பிரச்சினைகளைப் பேசும் எதிர்க்கட்சிகளை, இவர்கள் இப்படித்தான் என்று முத்திரை குத்தி ஓரம்கட்டிவிட முடியும். நீதிமன்றத்திற்கு சட்டத்தின் படி அனைத்து ஆதாரங்களும் கொடுத்தால் தான் நீதி கிடைக்கும். ஆனால் ஊடகங்களுக்கு இந்தப் பிரச்சினையில் உண்மை இருக்கின்றது என்று நம்பினாலே அதற்கு ஆதரவாக மக்களைத் திரட்டி அரசாங்கத்தை அடக்க முடியும்!

ஆனால் நான்கு தூண்களில் உச்சபட்ச அறத்தோடும், அச்சமின்றி செயல்படும் வாய்ப்பிருக்கும் ஊடகங்களே ஆட்சியாளர் களுக்கு விலை போனபிறகு. சட்ட மன்றமும் ரீல்ஸ் கண்டண்ட் தயாரிக்கும் கூடமாக மாற்றப்பட்டு விட்ட நிலையில் எதிர்க்கட்சிகளும் நீதிமன்றங்களும் என்கிற இரண்டு தூண்கள் மட்டும் மக்களாட்சியை எப்படி தூக்கிப் பிடிக்க முடியும்?

மானியக் கோரிக்கை என்றால் அந்த துறை சார்ந்த தவறுகளை, சந்தே கங்களை, திட்டங்களைப் பற்றி மக்கள் சார்பாக எதிர்க்கட்சிகள் சட்டமன்றத்தில் கேட்பார்கள். அதற்கு துறை சார்ந்த அமைச்சர் பதில் கூற வேண்டும். ஆனால் இங்கே முதலமைச்சரோ இந்த சட்டமன்ற நடைமுறைகளை எல்லாம் காலில் போட்டு மிதிப்பவராக, நான் மூன்று நாட்கள் கழித்து ஒட்டுமொத்தமாக பதில் சொல்றேன், யாரும் ஓடிவிடாதீர்கள் என்று ரீல்ஸ் கண்டெண்ட் கொடுத்து விட்டு அவரே ஓடிச் செல்கிறார்!

ஆக திங்கள் கிழமை ஒரு பெரும் ஸ்கிரிப்ட்டை அவர் அரசியல் ஆலோசகர்கள் எழுதி, அதை எப்படி டெலிவரி செய்ய வேண்டும் என்று இயக்குனர்களை வைத்து ஒத்திகை நடத்தி, ஸ்கிரிப்ட்டை மனப்பாடம் செய்து தயாராக சட்டமன்றத்தில் வந்து ஏற்ற இறக்கங்களுடன், எதிர்க்கட்சிகள் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல், வைப் ஏற்றும்படியாக ஒரு டிராமாவை அரங்கேற்றுவார்!

இதை எதிர்க்கட்சிகள் எதிர்த்துக் கேள்வி கேட்கக் கூடாது என்று சபாநாயகர் திங்கள் கிழமை அன்று கேள்வி நேரத்தையே நீக்கி விட்டார். அதையும் மீறி எதிர்க்கட்சிகள் எழுந்து கேட்டால், அவர்களை அடக்குவதற்காக முன் கூட்டியே அவர்கள் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு போலீஸாரை அனுப்பி சோதனை என்கிற பெயரில் ஊடகங்களுக்கு தீனி போட்டு எதிர்க்கட்சி உறுப்பினர்களை உளவியல் ரீதியாக சட்டமன்றத்தில் முடக்கும் வேலையை செய்கின்றார்கள் ! இன்னும் சில எதிர்க்கட்சி உறுப்பினர்களை அதிகாரத்தைப் பயன்படுத்தி இரண்டாக உடைத்து வாய்ப்பூட்டு போட்டுவிட்டார்கள்.

சட்டமன்றமும், எதிக்கட்சிகளும் முடக்கப்படுகிறார்கள். நீதிமன்றத்திற்கு ஆதாரம் வேண்டும். ஊடகங்கள் விலைபோய்விட்டன.

இங்கே நடப்பது மக்களாட்சியா? அல்லது சினிமா மோகத்தால் நாசமாய் போய்க்கொண்டிருக்கும் மானங்கெட்டவர்கள் ஆட்சியா?

நடப்பதையெல்லாம் பார்க்கும் போது, நாடும் நாட்டுமக்களும் நாசமாய்ப் போகட்டும் என்று சபிக்கின்ற மனநிலை ஏற்படுவதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது!

---

### சுயமரியாதையின் வடிவம் – தியாகத்தின் உருவம்

# வ.உ.சி.யின் புகழைப் போற்றுவோம்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, செப். 7-

‘கப்பலோட்டிய தமிழர்’ வ.உ.சிதம்பரனார் அவர்க ளின் பிறந்த நாளையொட்டி சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப்பதிவு வரு மாறு:-

விடுதலைப் போராட்ட வீரர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்க ளின் பிறந்த நாள் இன்று.

விடுதலைப்போரில் பங்கேற்று சிறையில் செக்கி முத்த செம்மல்.

ஆங்கிலேயர்களுக்கு எதி ராக ‘சுதேசி’ கப்பல் விட்ட பெருமைக்குச் சொந்தக்கா ரர்.



சுயமரியாதையின் வடிவமாகவும் மற்றும் தியா கத்தின் உருவமாகவும் வாழ்ந்து மறைந்த வ.உ.சி. அவர்களின் புகழைப் போற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.